

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி கழக மறு சீரமைப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தலைமைக் கழகப் பிரதிநிதி புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் தமயந்தி.தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.சி.பிரபாகரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வண்ணார்பேட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் கழக மறு சீரமைப்பு தொடர்பான ஆலோசனை கூட்டம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.உடன் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல்,புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா,மாவட்ட அவைத்தலைவர் முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலியின் 246வது ஆண்டு நினைவு நாள்!

முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அறிக்கை!



சிவகங்கை, அக்.19- நாட்டின் சுதந்திரத்திற் காக ஏற்பட்ட போரில் தன் உயிரைமாய்த்துக் கொண்ட வீரக்குயிலியின்246 வது ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. இது குறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் விடுத் துள்ள அறிக்கையில் கூறி யுள்ளதாவது.

நாட்டின் சுதந்திர போராட்டத்தில் ஆங்கிலே யர்களின் படையினரை எதிர்த்து ராணி வேலுநாச்சி யார் தலைமையில் நடை பெற்ற விடுதலைப் போரில் படைத்தளபதியாக பணி யாற்றிய வீரத்தாய் குயிலி தன்னுடைய உயிரினை தீயில் மாய்த்துக்கொண்டு வீர மரணமடைந்தார். அவ ரது வீரமரணம் ஆங்கிலே யர்களை அதிர்ச்சிக்குள் ளாக்கியது.

அத்தகைய வீரத்தாய் குயிலுக்கு கழக தலைவர் முதல்வர் தளபதி ஆட்சியில் சிவகங்கை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை யினை ஏற்று கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக வீரத் தாய் குயிலியின் முழுஉருவ வெண்கலச் சிலை அமைக் கப்பட்டது. கழகத்தலைவர் அப்போதைய முதல்வர் தளபதி மூ.க.ஸ்டா லின் அவர்கள் வீரத்தாய் குயிலி யின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். அத்த கைய வீரப்போராளி குயிலி யின் நினைவு நாள் ஒவ் வொரு ஆண்டும் அக்டோ பர் 20 ம்தேதி அனுசரிக்கப் படுகிறது.

வீரத்தாய் குயிலியின் தியாகத்தை போற்றும் வகையில் எதிர்கால சந்ததி யினர் தெரிந்து கொள்ளும் வகையில் நாளைகுயிலியின் 246வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காலை 11 மணியளவில் சிவ கங்கை காளையார் கோவில் சாலையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மாவட்ட கழக செயலாளர் எனது தலைமையில் (கே. ஆர். பெரியகருப்பன்) அவ ரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தப்படும். இதில் மாவட்ட கழக நிர் வாகிகள், ஒன்றிய,நகர, பேருர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே ஆர்.பெரி யகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கூடுதல் ரயில் - பயணிகள் வசதிகளை நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

தயாநிதி மாறன் எம்.பி. கோரிக்கை!



சென்னை, அக். 19- தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட்ட முக்கி யமான வழித்தடங்களில் கூடுதல் ரயில் சேவைகள் தொடர்பாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடா ளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி., ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ் ணவ் அவர்களுக்கு பலமுறை கடி தம் வாயிலாக வலியுறுத்திருந்த நிலையில் எதிர்வரும் ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை கால விடு முறைகளுக்காக 5 சிறப்பு ரயில் களை தெற்கு ரயில்வே அறிவித்துள் ளது. அதன்படி சென்னை சென்ட்ரல் - போத்தனூர், தாம்பரம் - செங் கோட்டை, ஈரோடு - திருநெல்வேலி, திருநெல்வேலி - தாம்பரம், சென்னை சென்ட்ரல் - கொல்லம் ஆகிய மார்க் கங்களில் சிறப்பு ரயில்கள் இயக்கப்ப டுகின்றன. எனினும் மற்ற பண் டிகை மற்றும் நீண்ட விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்களில் போதிய ரயில்கள் இல்லாதிருக்கும் குறைகளை தீர்க்கும் வண்ணம், கூடுதல் நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பின ருமான திரு.தயாநிதி மாறன் வலியு றுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : -

தமிழ்நாட்டில் முக்கிய வழித்தடங் களில் கூடுதல் ரயில்களை இயக்குவ துடன், கூடுதல் ரயில் பெட்டிகளை யும் இணைக்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் வழிகாட்டுதலின்படி நான் தொடர்ந்து வலியுறுத்திவந்த நிலை யில், எதிர்வரும் ஆயுத பூஜை உள் ளிட்ட விழாக்கால விடுமுறைக்காக 5 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள் ளது வரவேற்கத்தக்கது.

எனினும் வரவிருக்கும் விடுமு றைக் காலங்களுக்கும் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய வழித் தடங்களில் மேலும் கூடுதல் ரயில் கள் இயக்கப்பட வேண்டும். அதேசம யம், அனைத்து வழக்கமான ரயில்களிலும் குறைந்தது பத்து கூடு தல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக, முன்பதிவு இல்லாத பெட்டிகளில் ஏற்படும் கடு மையான நெரிசல், பயணிகள் பாது காப்பு, பெண்கள், முதியவர்கள் மற் றும் சிறுவர்களுக்கு ஏற்படும் சிரமம் ஆ கி ய வ ற் ற ை க் கருத்தில் கொண்டு, கூடுதல் பெட்டிகள் உ ட ன டி ய ா க இ ண ை க் க ப் ப ட வேண்டும். விடுமு றைக் காலங்களில் ம ட் டு மி ன் றி , ஆண்டு முழுவதும் பயணிகளின் வசதியை உறுதி செய்யும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த வேண்டும். ரயில்வே அமைச்சகம் தற்போதைய விடுமுறைக்காக சிறப்பு ரயில்களை அறிவித்திருப்பது போதாது. வரவிருக்கும் அனைத்து விடுமுறைக் காலங்களுக்கும் இதே போன்று கூடுதல் ரயில்கள் இயக்கப் பட வேண்டும். மேலும், அனைத்து ரயில்களிலும் குறைந்தது 10 கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறேன்.

பயணிகளின் பாதுகாப்பும் வசதி யுமே மிகவும் அத்தியாவசியம். அவ சியம், அவசரம் என்பதால் இதனை உடனடியாக நிறைவேற்ற ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரயில்வே அமைச்சகம் இந்த கோரிக்கைகளை உடனடியாக கவனத்தில் எடுத்து, தமிழ்நாட்டு பய ணிகளுக்கு போதிய ரயில் வசதி களை உறுதிபடுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



விளாத்திகுளம் – எட்டையாபுரம் சாலையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி புதிய கிளை திறப்பு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நிகழ்வில் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல் விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ் வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன் மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம் வார்டு உறுப்பினர் கலைச்செல்வி செண்பகராஜ் வார்டு செயலாளர்கள் வெங்கடேசன், அய்யனார்,சுப்புராஜ், தமிழரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வங்கி அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியம்,வாதலக்கரை ஊராட்சி, இடைச்சியூரணி கிராமத்தில் ரூ.9.80லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகுமார், தனலட்சுமி கூட்டுறவு சார்பதிவாளர் முருக லட்சுமி ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், இம்மானுவேல், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாலட்சுமி, ஒன்றிய பிரதிநிதி சிவலிங்கம் கிளைச் செயலாளர்கள் ரவி (எ) சுப்பையா, முருகதிருமாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி!

அமைச்சர் பிரபு பங்கேற்ற நிகழ்ச்சியில்


சிவகங்கை எம்.எல்.ஏ.தொடர்ந்து புறக்கணிப்பு!

சிவகங்கை, அக்.19- சிவகங்கை மாவட்ட வருவாய் துறை சார்பில் நேற்று முன் தினம்17ம்தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சி யர் அலுவலக அரங்கில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கனிம வளத்துறை அமைச்சர் டி. கே .பிரபு மற்றும் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள் பங்கேற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந் தது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் டி.கே.பிரபு கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகளை வழங்கி னார். சட்டமன்ற உறுப்பி னர்கள் சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்), இளங்கோ வன் (மானாமதுரை) மற் றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் சிவ கங்கை தொகுதி எம்.எல்.ஏ. திருமதி குழந்தை ராணி நாச் சியார் விழாவை புறக்கணித் தார். தொடர்ந்து அவர் அமைச்சர் டி. கே பிரபு நிகழ்ச்சியில் பங்கேற்காமல் புறக்கணித்து வருகிறார் .இந்த முறையும் அவர் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்க வில்லை. இரண்டு மாதங்க ளுக்கு முன் சிவகங்கை யில் நடைபெற்ற சமூக நல விடுதி திறப்பு விழாவினை அவர் புறக்கணித்தார்.

நேற்றும் அமைச்சர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வில்லை. தொடர்ந்து அமைச்சர் டி.கே.பிரபு பங்கேற்கும் நிகழ்ச்சியினை புறக்கணித்து வருகிறார் . அமைச்சருக்கும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினருக்குமிடையே மோதல் நீடித்து வருகிறது. இதனால் அமைச்சர் சட்ட மன்ற உறுப்பினருக்கு மிடையே ஏற்பட்டுள்ள பிரச்னையினால் த.வெ.க. தொண்டர்களுக்கிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது .

முட்டுச்சந்தில்



கடமை என்ன என்பதை
அறியாத அப்ரன்டிஸ்
அமெச்சூர்கள்
ஒரு பக்கமும்

முதலமைச்சராக
நடக்காமல்
முதலமைச்சராக நடிக்க
மட்டுமே கால்ஷீட்
கொடுத்து அலையும்
சினிமாத்தனத்தில்
“முதன்மை அமைச்சர்”
மறுபக்கமும்..

இது தான் தங்களுக்கான
பொற்காலம் என ஆடித்
தீர்க்கும் அதிகாரிகள்
இன்னொரு பக்கமும் என

மொத்தத் தமிழகமும்
முட்டுச்சந்தில்
விக்கித்து நிற்கிறது...

சட்டம் ஒழுங்கு சர்வநாசம்...

சகல அத்தியாவசிய
பொருட்களின்
விலைகளும்
கடும் உயர்வு...

இயற்கை சீற்றங்களை
நோக்கி நகரும் நெருக்கடிக்
காலத்தை எதிர் கொள்ள
முறையான திட்டமின்மை..

மின்தடை
ஒரு பக்கம் தாறுமாறான
மின்கட்டணம் மறுபக்கம்...

தி.மு.க. ஆட்சிக்காலத்து
நிறைவுற்ற திட்டங்களுக்கு
ரிப்பன் வெட்டுவதை தவிர
வேறு எதுவுமே நடக்காத
முடக்க நிலையில் அரசு
நிர்வாகம்...

குறுவை சம்பா சாகுபடி
முற்றிலுமாக சீர்குலைவு...

கொடுத்த
வாக்குறுதிகளை
கோமாவில் கிடத்தி
வைத்து விட்டு

“கையை
அசைத்தார்”
“காலை ஆட்டினார்”
“பல்லால் சிரித்தார்”

“பட்டு வேட்டியில்
ஜொலித்தார்”
என்றெல்லாம்

அருவருப்பு பெய்து
நியூஸ் பிரேக்கிங்களின்
கிறுக்குத்தனங்கள்...

இப்படி

துயரங்களின் தோரணமாக
தொடரும்
இந்த ஆட்சிக்காக

வாக்களித்தவர்கள்
மட்டுமல்ல இந்த ஆட்சியை
உருவாக்கிய EVM
எந்திரங்களுக்கு உயிர்
இருந்தால் அவைகளுமே
ஆளத் தெரியாத
மக்குகளிடம் தமிழகத்தை
ஒப்படைத்து விட்டோமோ
என கண்ணீர் விட்டு கதறித்
தான் அழும் ...

இது தான்
நிஜம்
இது தான் நிதர்சனம்...

இந்த பொம்மலாட்ட
ஆட்சியின் கயிறு பிடித்து
ஆட்டிக் கொண்டிருக்கும்
மத்தியில் ஆளும்
பாவிகளுக்கும்...

இந்த மொத்த
மடத்தனங்களுக்கு
காரணமான அந்த
“காவிகளுக்கும்” இது
தெரியும் தானே...

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர்